DINATHANTHI 18 APR 09

## மாநில எறிபந்து போட்டி:

# ஈஷா ஹோம் பள்ளி சிறுமிகள் வெற்றி

கோவை,ஏப்.18–
மாநில அளவிலான 15 வயதுக்குட்பட்டோருக்கான எறிபந்து போட்டி கடலூரில் நடந்தது. இதில் கோவை மாவட்ட அணியின் சார்பாக கலந்து கொண்ட 12 சிறுமிகளில் 11 பேர் ஈஷா ஹோம் பள்ளி சிறுமிகள் ஆவார்கள். அவர்கள் முதல் முறையாக மாநில அளவிலான போட்டியில் கலந்து கொண்டு, இறுதி போட்டி வரை எதிர்அணியினரை தோற்கடித்து கோப்பையை கைப்பற்றினார்கள். இறுதி போட்டியில் ஈரோடு மாவட்ட அணியை 17–16, 15–9 என்ற நேர் செட் கணக்கில் தோற்கடித்தனர்.